# நற்றிணையில் அத்துச் சாரியையின் ஆளுமை நோக்கில் இயற்கை பின்னணியில் காதல் அன்பு

12

அ.பாபு
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி
மயிலம் 604 304
Mail id:babuda93213@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்மொழியில் தோன்றிய அகநூல்களில் நற்றிணை சிறப்பு வாய்ந்த நூலாகும். இந்நூலானது பல்வேறு இலக்கண இலக்கிய கூறுகளை உள்ளடைக்கியும்,பல வரலாற்று நிகழ்வுகளை தன்னூல் தாங்கியும், ஒரு ஒப்பற்ற இலக்கியமாக இன்றளவும் திகழ்ந்து வருகின்றன. அத்தகைய சிறப்பு வாய்ந்த நற்றிணையில் தொல்காப்பியர் கூறிய ஒன்பது வகையான சாரியைகளுள் அத்துச் சாரியை எவ்வாறு பயின்றுவந்துள்ளன என்றும், அவற்றின் பின்னணியில் தலைவன் தலைவியின் காதல் அன்பு ஆகியவை இயற்கையோடு எவ்வாறு சுட்டப்படுகிறது என்றும். ஆய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** குன்றம், அடுக்கம், யாமம், கானம், தாக்கணத்தி

**முன்னுரை**

நல் எனும் சிறப்பை பெயரிலே கொண்டு விளங்கும் செவ்வியல் இலக்கியம் நற்றிணையாகும். இவ்விலக்கியமானது முதல் கரு உரிப்பொருள் எனும் முப்பெரும் சிறப்பைப் பெற்றுள்ள இவற்றுள் இயற்கை பிண்ணனியில் தலைவன் தலைவியின் காதல் அன்பு எவ்வாறு கூறப்படுகின்றன என்பதையும் அத்துச்சாரியை எவ்வாறு அவற்றுடன் பயின்றுவந்துள்ளன என்பதையும் பின்வரும் தலைப்பின்கீழ் விரிவாக காண்போம்.

**நற்றிணையில் அத்துச் சாரியை**

நற்றிணையில் உள்ள 401 பாடலில் 59 இடங்களில் அத்துச்சாரியை பயின்றுவந்துள்ளன .

**முதற்பொருளில் அத்துச் சாரியை**

முதற்பொருளைக் குறிக்கும் குன்றம் எனும் சொல் 10 இடங்களில் அத்துச் சாரியை பெற்று வருகின்றன. குறிஞ்சித் திணைப் பாடல்களில் 4 இடங்களிலும் முல்லைத்திணைப் பாடலில் 2 இடங்களிலும் பாலைத்திணைப் பாடலில் 4 இடங்களிலும் அத்துச் சாரியை பயின்று வருகின்றன.குறிஞ்சித்திணைப் பாடலில் குன்றம் எனம் முதற்பொருளைக் குறிக்கும் சொல்லுடன் அத்துச் சாரியை பயின்று வருவதை பின்வருமாறு காண்போம்.

**சான்றாக**

நாள்மழை தலைஇய நல்நெடும் **குன்றத்து**
மால்கடல் திரையின் இழிதரும் அருவி (நற் -17)

இப்பாடலில் குன்றம் எனும் சொல் இறுதியில் அத்துச் சாரியைப் பெற்றுள்ளன. தலைவனின்

அன்பைக் கூற நினைத்த தலைவியானவள் இயற்கை புனைவின் மூலம் விளக்க கருதுகிறாள் . தலைவனின் நாட்டில் உள்ள வண்டினம் கூட அதன் இணையோடு சேர்ந்து தேனை உண்டு களிக்கிறது. ஆனால் தலைவனுக்கு இவை தெறியாமல் போனதே! என்று இப்பாடலில் இயற்கை நிகழ்வேடு தலைவனின் அன்பை வெளிப்படுத்துவதையும் விரைவில் வரைவு மேற்க்கொள்ளவும் தலைவி கூறுவதை கொண்டு அறியமுடிகிறது.மேலும் நற்றிணை 261 பாடலில" குன்றம் எனும் சொல் அத்துச் சாரியைப் பெற்றுவருகின்றன.சான்றாக

" வெஞ்சுடர் கரந்த கமஞ்சூல் வானம்

நெடும்பல் **குன்றத்துக்** குறும்பல மருகி "

எனும் இப்பாடலில் வெப்பம் தரும் ஞாயிறு தோன்றா வண்ணம் நீண்ட பெரிய மேகத்தை மலையிடத்துக் கொண்டுச் சேர்க்கும் தன்மைக் கொண்ட வானம் உள்ள நாட்டையுடைய தலைவனே!என்று தலைவனின் அன்பை கூறுகிறாள். மேலும் குறிஞ்சித்திணைப்பாடலில் 268 வது பாடலிலும் 357 வது பாடலிலும் குன்றம் எனும் முதற்பொருளைக் குறிக்கும் சொல்லுடன் அத்துச் சாரியை பயின்று வந்துள்ள.

**முல்லைத் திணையில் பாடலில் அத்துச் சாரியை**

வெப்பம் மிகுதியால் ஏற்பட்ட காற்றானதுவீசத்தொடங்கும் குன்றத்திக் கண் உள்ள கொன்றை மலரைப் போன்று தலைவியின் நிலை உள்ளது என்று கூறும் பாடலில்

காயாங் **குன்றத்துக்** கொன்றைப் போல

மாலை விடகரம் விளங்க மின்னி (நற்371)

எனும் இப்பாடலில் குன்றம் எனும் சொல் அத்துச் சாரியைப் பெற்றுவந்துள்ளன மேலும் கொன்றை மலரானது தலைவிக்கு உவமையாக கூறுப்பட்டுள்ளன கொன்றை மலரையுடைய நாட்டையுடைய தலைவனே என்றும், வெப்பம் மிகுதியால் வாட்டம் கொள்ளும் கொன்றை மலரைப்போன்ற தலைவியே என்றும் இரண்டு பொருள் கொள்ளலாம். இங்கு இயற்கையின் முலம் தலைவன் தலைவி அன்பு வெளிப்படுவதை காணலாம் .

**பாலைத்திணையில் அத்துச் சாரியை**

பாலைத்திணையில் முதற்பொருளை உணர்த நின்ற புலவர் கண்டோர் கூற்றாக இயற்கையின் நிகழ்வை கூறுகிறார் தலைவனின் அன்பை நற்றாய்க்கு உரைப்பதுப் போன்று அமைந்தப் பாடலில் குன்றம் எனும் சொல் அத்துச் சாரியைப் பெற்றுவந்துள்ளன.

**சான்றாக**

அருந்துபட வீழ்ந்த பெருந்தண் **குன்றத்து**

ஒலிவல் ஈத்தின் உலவைஅம் காட்டு (நற்-2)

இப்பாடலில் குன்றம் எனும் சொல் அத்துச் சாரியை இடம் பெற்றுள்ளன. மேலும் 43,92, 171,17,274 ஆகிய பாடல்களில் அத்துச்சாரியை பயின்று வருகின்றன.

**அடுக்கம் எனும் சொல் அத்துச் சாரியை பெறுதல்**

அடுக்கம் எனும் சொல்லானது நற்றிணையில் ஒன்பது இடங்களில் அத்துச் சாரியைப் பெற்று

வருகின்றன. அவை குறிஞ்சித்திணையில்122,151,334,255,233,399, ஆகிய ஆறு பாடல்களிலும் பாலைத்திணையில் 7,28,205 ஆகிய மூன்று இடங்களிலும். முதற்பொருளைக் குறிக்கும் சொல்லான அடுக்கம் எனும் சொல் அத்துச் சாரியைப் பெற்று வருகின்றன.

**சான்றாக**

இருங்கல் **அடுக்கத்து** என்னையர் உழுத
கருங்காற் செந்தினை கடிய முண்டன (நற்-122)

எனும் இப்பாடலில் பெரிய மலைப்பக்கத்தில் என் அய்யன்மார்கள் உழுதுவிதைத்த செந்தினை அறுவடை செய்யும் காலம் வந்துவட்டது.என்று இயற்கையை சுட்டி தலைவனே அன்று என் பெற்றோர்கள் விதைத்த செந்தினை காவலுக்கு நானும் என் தோழியும் காவல் காக்கும் பொருட்டு காவலுக்கு வந்த பொழுது நீயும் நானும் காதல் செய்ய தொடங்கினோம்.இனிக்காவலுக்கு நாங்கள் வர முடியாது.இனி நாம் சந்திக்க முடியாது அதனால் நாம் விரைவில் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்னு நோக்கில் இப் பாடல் அமைகிறது. இப்பாடலில் தலைவனுக்கு உரைக்கும் பொழுது இயற்கையை சுட்டிக் காட்டியே இயற்கையின் பின்னணியில் தலைவின் காதல் வெளிப்படுவதை அறிந்துக்கொள்ளலாம் .

**கானம் எனும் சொல்அத்துச் சாரியை பெறுதல்**

முதற்பொருளைக் குறிக்கும் சொல்லான கானம் எனும் சொல் 17,387,262,394 ஆகிய நான்கு இடங்களில் கானம் எனும் சொல் அத்துச்சாரியைப் பெற்று வருகின்றன.

**சான்றாக**

அகல் இருங் **கானத்து** அல்கு அணி நோக்கித்
தாங்கவும் தகைவரை நில்லாநீர் சுழல்பு (நற்-17)

இப்பாலில் பறந்த காட்டின் வழியே நீரானது கடல் போன்று அலை எழுப்பி செல்லும் தன்மைக் கொண்டது என்று கூறுமிடத்தில் கானம் எனும் சொல் அத்துச்சாரியைப் பெற்றுவந்துள்ளன.மேலும் முல்லைத்திணையில் 394 வதுப் பாடலிலும் கானம் எனும் சொல் அத்துச்சாரியைப் பெற்று வருகின்றன.

**யாமம் எனும் சொல் அத்துச் சாரியை பெறுதல்**

யாமம் எனும் சொல்லானது குறிஞ்சித்திணைப் பாடல்களில் 36,129,357 ஆகியப் பாடல்களில் யாமம் எனும் சொல் அத்துச் சாரியைப் பெற்று வருகின்றன. இங்கு தொல்காப்பியர்கூறும் குறிஞ்சித்திணைக்கு கூறிய காலம் “குறிஞ்சி கூதீர் யாமம் என்பனார் புலவர்” (தொல்-7)எனும் நூற்பாவில் கூறியவாறு அத்திணையில் பயின்று வந்துள்ளன நெய்தல் திணையில்159,178,199 ஆகியப் பாடல்களிலும் பாலைத்திணையில் 262 வதுப் பாடலிலும் யாமம் எனும் சொல் அத்துச்சாரியைப் பெற்றுவருகின்றன

**சான்றாக**

ஆடுமயிற் பீலியின் வாடையொடு துயர்வர

உறைமயக்கு உற்ற ஊர் துஞ்சு **யாமத்து** (நற்-262)

இப் பாடலில் தலைவிக் கூற்றானது நிகழ்கிறது.தோட்டத்தில் உள்ள தாக்கணத்தி எனும் மலரானது வாடைக்காற்றுடன் சேர்ந்து மயில் தோகையைப் போன்று ஆடிக்கொண்டு இருக்கிறது.ஆனால் வாடைக்காற்றானது எனக்குமட்டும் துன்பம் தருவதாக அமைகிறது இவற்றுள் இயற்கையை தன்துன்பத்திற்கு காரணம் என்று கூறுமிடத்தில் இயற்கை எவ்வாறு அவர்களின் வாழ்வோடு ஒத்துப் போகின்றன என்பதையும. யாமம் எனும்சொல் அத்துச்சாரியைப் பெறுவதையும் காணமுடிகிறது.

**மன்றம் எனும் சொல் அத்துச் சாரியைப் பெறுதல்**

மன்றம் எனும் சொல் குறிஞ்சித் திணையில் 33,346 ஆகிய பாடல்களிலும் நெய்தல் திணையில் 330 வதுப் பாடலிலும் மன்றம் எனும்சொல் அத்துச் சாரியைப் பொற்று வந்துள்ளன. மேலும் முற்றம் எனும் சொல் 143 வதுப் பாடலிலும் ,இல்லம் எனும் சொல் 59 வதுப் பாடலிலும், அழுவம் எனும் சொல் 62 வதுப் பாடலிலும், அற்றம் எனும் சொல் 101 வதுப் பாடலிலும், பாக்கம் எனும் சொல் 123,203,232 ஆகிய பாடலிலும், ஞாலம் எனும் சொல்15 வதுப் பாடலிலும் பொருகளம் எனும் சொல் 180 வதுப் பாடலிலும், உரைப் புலம் எனும் சொல் 181 வதுப் பாடலிலும் ,முண்டம் எனும் சொல் 275 வதுப் பாடலிலும், அவை எனும் சொல்171, 39 ,276 ஆகிய பாடலிலும் சிறுபுனம் எனும் சொல் 306 வதுப் பாடலிலும் , இலவம் எனும் சொல் 105 வதுப் பாடலிலும் ,முதுமரம் எனும் சொல் 83 வது பாடலிலும், வெதிர்எனும் சொல் 62 வதுப் பாடலிலும் ,மா எனும் சொல் 243 ,118 ஆகிய இரண்டுப் பாடலிலும் பாடலிலும், கண்ணகம் எனும் சொல் 71 வதுப் பாடலிலும், முதல் கருப் பொருளை கூறும் இடங்களில் அத்துச் சாரியை பயின்றுவந்துள்ளன இவற்றின் பின்னணியில் இயற்கை நிகழ்வை வைத்து தலைவன் தலைவி அன்பு நிலையை அறிந்துக்கொள்ளவும் முடிகிறது.

**உரிப் பொருளில் அத்துச் சாரியை**

உரிப் பொருளான புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பவை ஐந்திணைக்கு உரிய பொருளாகும்.இவை நற்றிணையில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்று பின்வரும் தலைப்பின் கீழ் காண்போம்.

நெஞ்சம் எனும் சொல்லானது 233,236,97ஆகியமூன்றுப் பாடலில் அத்துச் சாரியைப் பெற்றுவருகின்றன.

**சான்றாக**

கூறுவென் வாழிதோழி முன்னுற
நாருடை **நெஞ்சத்து** ஈரம் பொத்தி (நற்233)

எனும் பாடலில் தலைவிக்கு தோழிக் கூறுவது போன்று அமைந்தப் பாடலில் முன்பு பலமுறை தலைவன் வந்துள்ளான். ஆதலால் அவன் தன்னுடைய அன்பு உள்ளத்தில் அருளையும் அன்பையும் பெற்று சான்றோண் ஆனான் என்ற செய்தியை கூறுமிடத்தில் நெஞ்சம் எனும் சொல்லில் அத்துச் சாரியை பெறுகின்றன. மேலும் துயரம் எனும் சொல் 14 வதுப் பாடலிலும், உள்ளம் எனும் சொல் 297 வதுப் பாடலிலும் அத்துச் சாரியைப் பெற்று வந்துள்ளன.

**முடிவுரை**

- அத்துச்சாரியை பயின்று வரும் சொற்கள் பெரும்பாலும் முதற்பொருளான குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை எனும் நிலத்தைக் குறிக்கும் சொல்லுடன் பயின்றுவந்துள்ளன.
- முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனும் முன்று பொருளைக் குறிக்கும் சொல்லுடன் சாரியை பயின்று அவற்றின் பின்னணியில் இயற்கைப் பின் புலத்தைக் காட்டுவதாக அமைவதை காணமுடிகிறது.
- இலக்கியத்தில் அத்துச்சாரியை இன்றியமையாத ஒன்றாக உள்ளது காரணம் சாரியை எடுத்துவிட்டால் அங்கு இலக்கிய சுவையும் பொருள் தெளிவும் இல்லாமல் போய்விடுகின்றன .
- நற்றிணையில் அத்துச்சாரியை முதற்பொருளான குன்றம் எனும் சொல்லில் அதிக இடங்களில் பயின்று வருகின்றன .
- அத்துச் சாரியை இடம்பெறும் சொற்கள் அவற்றின் பின்னணியில் உள்ள சூழலைத் தெளிவாக கூறுவதற்கே அமைகின்றன.

**துணைநூல் பட்டியல்**

1.**இளம்பூரணர்** — **தொல்காப்பியம் எழுத்திகாரம்**
சைவசித்தாந்த நூல் பதிபகம்
சென்னை-1953

2.**சோமசுந்தரனார்.பொ.வே.** — **நற்றிணை மூலமும் உரையும்**
சைவ சித்தாந்த நூல் பதிகம்
சென்னை-1966

3.**நாராயணசாமி ஐயர்.அ.** — **நற்றிணை நானூறு**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூல் பதிப்பகம் திருநெல்வேலி -6 1967.

4. **கற்பகம்,மு** — **தமிழ் இலக்கணங்களில் சாரியை,**
கவின் அச்சகம்,
மதுரை – 2005.

5. **பொற்கோ.** — **இலக்கண உலகில் புதிய பார்வை,**
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 2004